மீராசாது புதினத்தில் உளவியல் கூறுகள்

9

The Psychological Dimensions of Meerasadhu Novel

சுஸ்மிதா.க, புவனேஸ்வரி.சி

தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல், தமிழ்க்கல்லூரி, பேரூர், கோவை -10.

Susmitha.K, Bhuvaneswari.C

Department of Tamil, Thavathiru Shantalinga Adhigalar College of Arts and Science Tamil, Perur, Coimbatore -10.

ORCID ID: https://orcid.org/0009-0007-8844-7200

DOI: 10.5281/zenodo.21736815

Abstract

The human mind is not merely a manifestation of individual experiences; rather, it is a complex psychological construct shaped by social structures, cultural memory, and lived realities. Contemporary literature has increasingly foregrounded the intricate relationship between individual consciousness and the socio-cultural forces that influence human behaviour and emotional experiences. Within this literary tradition, the Malayalam writer K. R. Meera occupies a prominent position for her profound exploration of the psychological complexities of human existence, particularly those experienced by women. Her narratives intricately portray the emotional and psychological consequences of patriarchal oppression, social marginalisation, identity crises, trauma, loneliness, and internal conflicts. These psychological dimensions are presented not merely as individual conditions but as manifestations of broader socio-cultural realities. Against this backdrop, the present study seeks to examine the psychological dimensions represented in K. R. Meera's novel Meerasadhu, with particular emphasis on the ways in which psychological distress, loneliness, and inner conflicts are articulated through the experiences of its characters. By adopting a psychological perspective, this paper aims to analyse the complex interplay between the characters' inner consciousness and the socio-cultural forces that shape their psychological experiences.

ஆய்வுச் சுருக்கம்

மனித மனம் என்பது வெறும் தனிப்பட்ட அனுபவங்களின் வெளிப்பாடு மட்டுமல்ல, அது சமூகக் கட்டமைப்புகளாலும், கலாச்சார நினைவுகளாலும் வடிவமைக்கப்படுகின்ற ஒரு சிக்கலான அமைப்பாகும். சமகால இலக்கியத்தில் மனித மனத்தின் ஆழங்களை எழுத்தின் வழி பதிவு செய்யும், முக்கியமான படைப்பாளியாக மலையாள எழுத்தாளர் கே.ஆர் மீரா திகழ்கின்றார். குறிப்பாகப் பெண்களின் உளவியல் அனுபவங்கள், சமூக அடக்குமுறையால் உருவாகும் மன அழுத்தங்கள் மற்றும் உள்ளார்ந்த போராட்டங்கள் ஆகியவை இவரது எழுத்துக்களில் ஆழமாகப் பிரதிபலிக்கின்றன. மன அழுத்தம், தனிமை போன்ற உட்புறப் போராட்டங்கள் கதாபாத்திரங்களின் வாழ்க்கையில் வெளிப்படுகின்ற விதத்தினைக் கருத்தில் கொண்டு மலையாள எழுத்தாளர் கே.ஆர்.மீராவின் 'மீராசாது' புதினத்தில் வெளிப்படும் உளவியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

Keywords: உளவியல் - கே.ஆர்.மீரா – மீராசாது - சிக்மண்ட் ஃபிராய்டு - இட் – ஈகோ – சூப்பர்ஈகோ - மன அழுத்தம் - தனிமை – குற்றவுணர்வு - அடக்குமுறை – மனப்பிறழ்வு - உள்ளார்ந்த போராட்டம் – மனச்சிதைவு - ஆழ்ந்த உள்ளம் - நனவிலி மனம் – மனநோய், *Psychology - K.R. Meera - Meerasadhu - Sigmund Freud - Id - Ego - Superego - Stress - Loneliness – Guilt - Repression - Mental disorder - Inner struggle - Mental breakdown - Deep psyche - Subconscious mind - Mental disorder.*

முன்னுரை

இன்றைய இலக்கியங்கள் உளவியல் கோட்பாடு மனித நடத்தை மற்றும் மனத்தின் செயல்முறைகளைக் கணிப்பதற்கும், விளக்குவதற்குமான கட்டமைப்புகளாகத் திகழ்கின்றன. சிக்கலான உளவியல் நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கு, கோட்பாடு ஒரு தெளிவை வழங்குகிறது. நடத்தை, எண்ணங்கள், உணர்ச்சிகளைப் புரிந்துகொள்வதற்கு முறையான கட்டமைப்பை வழங்குவதால், அவற்றின் உதவியுடன் மனித அனுபவங்களின் பரந்த பன்முகத்தன்மையை நன்கு விளங்கிக்கொள்ள முடிகின்றது. தற்காலப் பெண்ணிய எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவரான, பெண்களின் உளவியல் அனுபவங்களை ஆழமாக வெளிப்படுத்திய கே.ஆர்.மீராவின் படைப்புகள் தமிழில் பேராசிரியர் முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் முனைவர் மோ.செந்தில்குமார் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இப்புதினங்கள் மனித மனத்தின், குறிப்பாகப் பெண்களின் சிக்கல்களை ஆழமாகப் பதிவு செய்கின்றன. சமூகக் கட்டுப்பாடுகள், தனிமை, காதல், நினைவுகள், வலிகள் ஆகியவை மனித மனத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களை வெளிப்படுத்துகின்றன. கே.ஆர்.மீராவின் மீராசாது என்ற தமிழ் மொழிபெயர்ப்பு புதினத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ள சிக்கலான உணர்வுகளை உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டின் நடத்தைக் கோட்பாட்டின் அடிப்படையில் குறிப்பாக 'மனநிலைப் பிறழ்வு' எனப்படும் மனநோய் வெளிப்படும் நிலையை ஆராய்ந்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

உளவியல்

உளவியல் என்பது மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்கும் துறையாகும். சைக்கி *(Psyche)*, லோகஸ் *(Logos)* எனும் இரு கிரேக்கச் சொற்களும் இணைந்து 'சைக்காலஜி' *(Phychology)* என வழங்கப்படுகிறது. உளவியலைக் குறிக்கின்ற 'சைக்காலஜி' எனும் ஆங்கிலச் சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். 'சைக்கி' என்பது மனத்தை அல்லது ஆன்மாவைக் குறிக்கின்ற கிரேக்கச் சொல். தமிழ் இலக்கியத்தில் மனிதர்களின் அக மற்றும் புற உணர்வுகள் உடம்பின் மூலம் வெளிப்படுகின்றன என்பதைத் தொல்காப்பியர்,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்ற
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப" **(தொல்.பொருள்.மெய்பாட்டியல்-252)**

என்று தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியல் நூற்பாவில் கூறியுள்ளார். மெய்ப்பாடு என்பது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் உடலின் புற அடையாளங்களாக வெளிப்படும் நிலையைக் குறிக்கிறது என்று தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் விளக்குகின்றார்.

பழங்காலத்திலிருந்தே மனிதன், தன் உடலுக்குள் ஆன்மா என்ற ஒன்று இருப்பதாகவும், இவ்வான்மா உடலைச் செயற்படுத்துவதாகவும் கருதினர். இவ்வான்மாவின் பண்புகளையும், செயல்களையும் ஆராயும் துறையாக உளவியல் தோன்றியது. உளவியல் என்பது தத்துவத்தின் ஒரு

பிரிவாக இருந்தது. அதற்குப் பின்னர், உளவியல் தனித்த துறையாக வளர்ச்சி பெற்றது. அரிஸ்டாட்டில் என்ற தத்துவ அறிஞர் எழுதிய 'ஆன்மாவின் இயல்புகள்' என்ற நூலே உளவியல் பற்றி எழுந்த முதல் நூலாகும். பல அறிஞர்கள் 'ஆன்மா', 'உள்ளம்' பற்றி பல நூல்களை எழுதியுள்ளனர். பண்டையக் காலத்தில் உளவியல் நூல்கள் பல பெயர்களைத் தாங்கி வந்தன. அறிவியல் முறைப்படி மன அமைப்பின் செயல்கள் பற்றிக் கருத்துக்களை வெளியிட்டவர் 'தேகார்ட்டே' என்னும் பிரெஞ்சு தத்துவ அறிஞர் ஆவார். 'உளவியல்' அல்லது 'சைக்காலஜி' என்ற பெயரை முதன் முதலாகத் தம் நூலுக்கு அமைத்தவர் 'குளோகல்' என்பவராவார். இவர் பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

உளவியல் ஆராய்ச்சி ஆன்மா பற்றியதாக இருக்க முடியாது எனக் கருதி 'ஆன்மா' என்னும் ஒன்று இல்லையென பலர் கூறினர். சிலர் 'உள்ளம்' அல்லது மனத்தின் செயல்களை விளக்கும் இயல் உளவியலாகும் என விளக்கினர். உயிர்களின் அறிவுநிலையை, அதற்கான உறுப்புகளை வரிசைப்படுத்திய தொல்காப்பியர்,

"ஆறறிவதுவே அவற்றொடு மனனே" **(தொல் - பொரு. மரபியல் - 27)**

என்று கூறியுள்ளார். ஆறாவது அறிவாக மனம் செயல்படுகிறது என வரையறை செய்கிறார். இக்கருத்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் உளவியலில் உளப் பகுப்புக் கோட்பாடு மனிதனது நடத்தைகளுக்கும் செயல்களுக்கும் முக்கியக் காரணங்களாக அமைபவை நனவிலி உள்ளத்தில் உறையும் நோக்கங்களேயாகும். இந்நோக்கங்கள் நனவு உள்ளத்தில் உறையும் நோக்கங்கள் அல்ல என்கின்றார் சிக்மண்ட் ஃபிராய்டு. ஆகவே இன்றைய உளவியலறிஞர்கள் உளவியலை மனித 'நடத்தையை' (Behaviour) ஆய்வு செய்யும் அறிவியல் துறையாக வரையறுக்கின்றனர்.

உளவியல் அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்டு

அறிவியல் அடிப்படையில் உளவியல் தொடங்கப்பட்ட காலம் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம். சோன்சு முல்லர், வெபர், எம் கோல்டு, பெச்சினர், வில்கம் உண்ட், பிரான்சிஸ் கால்ட்டன் போன்றவர்கள் உளவியலை அறிவியல் பாதைக்கு அழைத்துச் சென்ற முன்னோடிகளாவர். அரிஸ்டாடில் தொடங்கி வைத்த உளவியல் துறை பிரான்ஸிஸ் கால்டன் என்பவரால் ஒரு துறையாக அமைக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. வில்லியம் ஜேம்ஸ் என்பவர் இருபதாம் நூற்றாண்டு உளவியலின் தந்தை எனப்படுகிறார். இவரைத் தொடர்ந்து சிக்மண்ட் ஃபிராய்ட் மன எழுச்சி பற்றிய ஆய்வினைத் தொடர்ந்தார். ஃபிராய்ட் தான் முதன் முதலில் உணர்வுகள் பற்றியும், நரம்பு மற்றும் கனவு பற்றிய ஆய்வையும் மேற்கொண்டார். ஃபிராய்டினுடைய ஆய்வு செல்வாக்கு பெற்றதாகக் கருதப்பட்டது.

ஆஸ்திரியா நாட்டைச் சார்ந்த ஃபிராய்டு வியன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாகச் சேர்ந்து புகழ்பெற்ற பாரிசின் சார்காட் என்பவரிடம் பயிற்சி பெற்றார். பின்னர் ஜோசப் புருவரின் தொடக்க ஆய்வுகளை விரிவுபடுத்தி, மன நிலை அலசல் என்ற புதிய ஆய்வு முறையைக் கண்டறிந்தார். இவருடைய ஆய்வு முறை ஃபிராய்டியம் (Freudianism) என்று அழைக்கப்படுகிறது. இவரது உளவியற் கொள்கைகள் கலை, இலக்கியம், சமூகம், அறிவியல் ஆகிய எல்லாத் துறைகளுக்கும் பொருந்தின. இவர் உளவியலறிஞராக மட்டுமன்றி இலக்கிய வாதியாகவும் திகழ்ந்துள்ளார்.

"*Psychoanalysis is the name of a procedure for investigation of*

mental processes which are almost inaccessible in any other way" - சிக்மண்ட் ஃபிராய்டு

வேறு எந்த வகையிலும் அணுக முடியாத மனச் செயல்முறைகளை ஆராய்வதற்கான ஒரு செயல்முறைக்கு உளப்பகுப்பாய்வு என்று பெயர் என ஃபிராய்டு கூறுகிறார். சிக்மண்ட் ஃபிராய்டு மனத்தின் இயல்பு, பாகுபாடு, செயற்பாடு எனும் நிலைகளில் ஆராய்ந்து, உளவியலாய்வுக்கு அறிவியல் நிலையினை அளித்தவர் ஆவார். உளப்பகுப்பாய்வில் நனவுக்கும் நனவிலிக்கும் இடையிலான உறவுமுறைகளை இயங்கியல் ரீதியில் ஃபிராய்ட் விவரிக்கிறார். நனவு, நனவடங்கு, நனவிலி, இட், ஈகோ, சூப்பர் ஈகோ ஆகியவை ஏற்படுத்துகின்ற உள இயக்கங்களே ஃபிராய்டிய இயங்கியலாகும்.

உளப்பகுப்பாய்வு என்பது ஒருவரின் சொற்கள், செயல்கள், மனக்காட்சிகள் ஆகியவற்றில் புதைந்து கிடக்கும் மறைமுகமான பொருளை, உண்மையான பொருளை வெளிக் கொணர்வதையே நோக்கமாகக் கொண்ட ஓர் அறிவியல் ஆய்வு முறையாகும். ஃபிராய்டின் கருத்துப்படி, மனித மனம் மூன்று நிலைகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது. அவை,

1. நனவு மனம் (Conscious mind)

நனவு மனத்திற்கு முந்தியநிலை

2. நனவு அடங்கு மனம் (Subconscious mind)

3. நனவிலி மனம் (Unconscious mind)

என்பனவாகும். ஆழ்மனத்தில் அடக்கப்பட்டுப் புதைந்து கிடக்கும் நிறைவேறாத ஆசைகள் கனவுகளாக வெளிவருகின்றன.

ஃபிராய்டின் கருத்துப்படி, கலைஞனின் படைப்பாக்கம் ஒரு வகையான பகற்கனவாகக் கருதப்படுகிறது. மனித மனத்தைப் பிரித்தது போன்றே மனித ஆளுமையையும் (Personality) பகுத்துக் காட்டுகிறார். அவை,

1. உணர்வு உந்துதல் உடைய அடிநிலை (Id)

2. நான் எனும் தன் முனைப்பு (Ego)

3. மேனிலையாக்கம் கொண்ட தன் முனைப்பு (Super Ego)

என்பவனவாகும்.

சிக்மண்ட் ஃபிராய்டின் மனோதத்துவக் கோட்பாட்டின்படி, மனிதனின் ஆளுமை என்பது இட் (Id), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Superego) என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவை மனிதனின் எண்ணங்களையும் செயலையும் தீர்மானிக்கின்றன. இட்(Id) ஆசை மற்றும் தூண்டுதலுக்கான காரணியாகச் செயல்படுகின்றன. இது பிறக்கும்போதே மனிதனிடம் இருக்கும் அடிப்படை மனம். எதையும் உடனே பெற வேண்டும் என்ற ஆசையைக்கொண்டு காணப்படும். பசி, காமம், கோபம் போன்ற அடிப்படை உணர்ச்சிகளால் இட் இயங்குகின்றது. ஈகோ(Ego) இது இட் மற்றும் சூப்பர் ஈகோ ஆகியவற்றுக்கு நடுவில் நடுவராகச் செயல்படும். யதார்த்த உலகச் சூழலைப் புரிந்து கொண்டு ஆசைகளைச் சரியான நேரத்தில், சரியான முறையில் நிறைவேற்ற முயலுகின்றது. சூப்பர் ஈகோ(Superego) மனசாட்சியாக செயல்படுகின்றது. இது சமூகத்தின் ஒழுக்க நெறிகளையும் சட்டங்களையும் பின்பற்றும் பகுதியாக விளங்குகின்றது. தவறு செய்யும்போது குற்ற உணர்வைத் தருவதாகவும், மிகச் சரியாக இருக்க வேண்டும் என்று விரும்புவதாக உள்ளது.

இவ்வாறாக ஃபிராய்டு தன் உளவியல் கோட்பாட்டினை அறிவியல் நிலையில் நிலைநிறுத்தியுள்ளார்.

கே.ஆர் மீரா புதினங்களில் உளவியல்

சமகால மலையாள இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க பெண் எழுத்தாளர் மற்றும் பத்திரிக்கையாளர்களுள் ஒருவராக கே.ஆர்.மீரா திகழ்கிறார். கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் 1970-ல் பிறந்த மீரா, ஆரம்பத்தில் பத்திரிகையாளராகத் தனது எழுத்துப் பயணத்தை தொடங்கி, பின்னர் முழுநேர எழுத்தாளராக இயங்கத் தொடங்கினார். கே.ஆர்.மீரா 2001-ல் தனது புனைகதை எழுதும் பயணத்தைத் தொடங்கினார். அவரது முதல் சிறுகதைத் தொகுப்பான 'ஓர்மயூடே ஞாராம்பு' 2002-ல் வெளியிடப்பட்டு எழுத்துப் பயணத்தில் அடித்தளமிட்டது. இவர் புதினங்கள், குறுநாவல்கள், சிறுகதைத் தொகுப்புகள், சிறுவர் புதினங்கள் மற்றும் கட்டுரைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். மீராவின் படைப்புகள் பெரும்பாலும் அடையாளம், பாலினம் மற்றும் சமூக நெறிகள் போன்ற சிக்கலான கருப்பொருள்களை ஆராய்கின்றன. அவர் பல முக்கியமான இலக்கிய விருதுகளையும், விமர்சகர்களின் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். புதினங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் மற்றும் திரைக்கதைகள் எனப் பல பரிமாணங்களில் தனது முத்திரையைப் பதித்துள்ளார். இவரது புதினங்கள் பெண்ணுரிமை, சமூக அநீதி மற்றும் அரசியல் சார்ந்த சிக்கல்களை மையமாகக் கொண்டு பேசப்படுகின்றன. கே.ஆர்.மீராவின் புதினங்களில் பெண்களின் உணர்வுகள், ஏக்கங்களையும் சமூகம் மற்றும் குடும்ப அமைப்பில் பெண்கள் சந்திக்கும் இரட்டைச் சுமையையும், அதிலிருந்து அவர்கள் மேற்கொள்ளும் மௌனப் புரட்சியையும் தனது எழுத்துக்களில் பிரதிபலிக்கின்றார்.

சாதி, ஆணாதிக்க சமூகம் மற்றும் மரபு சார்ந்த தொழில்களில் பெண்களின் ஒடுக்குமுறையைப் பேசும் புகழ்பெற்ற ஆராச்சார் எனும் புதினத்திற்கு கேரள சாகித்ய அகாடமி மற்றும் கேந்திர சாகித்ய அகாடமி விருதுகளைப் பெற்றுள்ளார். ஜே.தேவிகா என்பவர் இப்புதினத்தை "தி ஹாங் வோமன்" என்ற தலைப்பில் ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார். 'அந்த மரத்தையும் மறந்தேன் மறந்தேன் நான்' எனும் புதினத்தைக் கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். ஆராச்சார், கபர், யூதாஸின் நற்செய்தி, மீராசாது, சூரியனை அணிந்த ஒரு பெண், தேவதையின் மச்சங்கள், கருநீலம் ஆகிய நூல்களை மொழிபெயர்ப்பாளர் மோ.செந்தில்குமார் மொழிபெயர்த்துள்ளார். கே.ஆர். மீரா நான்கு தொலைக்காட்சித் தொடர்களுக்குத் திரைக்கதை எழுதியுள்ளார். "ஒரே கடல்" என்ற படத்திற்குத் திரைக்கதை எழுதியுள்ளார். இதற்கு தேசியத் திரைப்பட விருதைப் பெற்றார்.

புதினங்களில் படைக்கப்படுகின்ற கதை மாந்தர்கள் அனைவரும் சமுதாயத்தில் பல்வேறு மனநிலைகளை உடையவர்களாக இருக்கின்றனர். இவர்களின் அக, மன உணர்வுகளையும், போராட்டங்களையும் புதினத்தைப் படிப்பதன் மூலம் அறிய முடிகிறது. தமிழ்ப் புதினங்களில் தொடக்க காலக் கட்டங்களில் நிகழ்ச்சி சித்திரிப்புகள் அதிகமாக இருந்தன. பின்னர் நிகழ்ச்சிச் சித்திரிப்புகள் குறைந்து பாலியல் சிக்கல்கள் நிறைந்த மனப்போராட்டங்கள், மன உணர்வுகள், உளவியல் சிக்கல்கள் ஆகியவற்றை மையமாக வைத்துப் புதினங்கள் வெளிவந்தன. சமுதாயச் சிக்கல்களைப் பேசும் சமுதாய புதினங்களும் தோன்றின. உளவியலையும் சமூகச் சிக்கல்களையும் ஒருங்கிணைத்துப் பேசும் புதினங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகவே வெளிவந்துள்ளன.

மாந்தர்கள் அனைவரும் அவரது கற்பனையின் வெளிப்பாடே ஆவர். தீய மாந்தர்களும் இதனுள் அடங்குவர். புதின ஆசிரியர் நேரடியாக உளவியல் கோட்பாடுகளை விவாதிப்பதில்லை மாறாக, புதினத்தில் கதை மாந்தர்களின் மூலம் உணர்வுகள், மன எழுச்சிகள், ஆளுமைப் பண்புகள், விரக்திகள், ஆசைகள், கனவுகள், ஏமாற்றங்கள் முதலியவற்றைச் சித்தரிக்கின்றார். இதன் அடிப்படையில் கே.ஆர்.மீரா புதினத்தில் உளவியல் கூறுகள் மிகுதியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கதைமாந்தரின் உளவியல் பிறழ்வு

தமது புதினங்களில் சமூக உறவுகளை இழந்து விட்டவர்களையும், உலகியல் உறவுகளை நிராகரிக்கின்றவர்களையும் அதிக அளவில் கதை மாந்தர்களாகப் படைத்துள்ளார். அக்கதைகளில் அனைவரும் சராசரி வாழ்வில் இருந்து விலகி வாழ்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் சமூக வாழ்க்கையிலிருந்து உணர்வு ரீதியாக விலகிய மனநிலையுடையவராக, ஆன்மீக வாதியாக மாறி உலக உறவுகளை நிராகரிப்பவராக கே.ஆர். மீராவின் 'மீராசாது' புதினத்தில் வரும் துளசி கதாப்பாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது.

கே.ஆர் மீராவின் மீராசாது புதினத்தில் காணப்படும் கதாப்பாத்திரங்களின் உளவியல் பிறழ்வுகளை மூன்று நிலைகளாக வகைப்படுத்தலாம். அவை,

1. இயல்பு நிலை கடத்தல்

2. அந்நியமாக்கப்படுதல்

3. குற்றவுணர்ச்சி

என்பவைகளாகும்.

1. இயல்பு நிலை கடத்தல்

மனிதர்களுடைய இயல்பு பிறழ்ந்த நடத்தையை அறியும் பொருட்டு உளவியலை அறிவியல் முறைப்படி உபயோகிக்கும் ஒரு துறை 'பிறழ்வியல் உளவியல்' ஆகும். பிறழ்வு என்ற சொல்லின் பொருளானது ஒரு வரையறை நிலை அல்லது ஒரு சராசரி நிலையிலிருந்து விலகிச் செல்வது ஆகும். இதை பெரும்பாலான மக்களுடைய நடத்தையிலிருந்து மாறுபட்டுக் காணப்படும் ஒரு நடத்தை எனக் கூறலாம். மனிதர்கள் அனைவரும் ஒரே மாதிரியான நடத்தை அல்லது ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர்களல்லர். மனிதர்களில் விருப்பங்கள், எண்ணங்கள், குறிக்கோள்கள், கற்பனைகள், ஆளுமைப் பண்புகள் முதலியவை மாறுபட்டுக் காணப்படுகின்றன.

இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், நடவடிக்கைகளையும், ஒரு சமூக வரையறைக்கு உட்படுத்திக் கொண்டு வாழ்கின்றார்கள். அவர்களுடைய சிந்தனையும், கற்பனையும் ஓர் எல்லைக்குள்ளே இருக்க வேண்டும். எல்லைகளைக் கடந்து வருவதில்லை. ஆனால் எல்லா மனிதர்களும் விதிகளுக்குள் அடங்குவதில்லை. இயல்பு நிலையிலிருந்து கடந்து சென்று தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றனர். இவ்வாறு இயல்புநிலை கடந்த நிலைக்குச் சென்று விட்டவர்களை 'இயல் பிறழ்ந்தவர்கள்' எனக் கூறுவர்.

இயல்பிலிருந்து விலகிய நிலை (Abnormality) என்ற சொல் எதிர்மறையானதாகும். இயல் பிறழ்ந்தமை என்ற சொல்லையும், நோய் அல்லது பிணி என்ற சொல்லையும், ஒரே பொருள்படக் கொண்டு மனப் பிறழ்வு (Mental Abnormality) என்றும், மனநோய் (Mental Disease) என்றும் வழங்கப்படுகின்றன. "மாயிகரில் இருக்கும் பழுப்பேறிய அறையில் பலவிதமான உடைசலும் விரிசலும் நிறைந்த சுவர்களுக்கிடையில் துருப்பிடித்த கட்டிலில், கொடியில் கிடக்கும் ஈர நாற்றமடிக்கும் துணிகளுக்குக் கீழே தனித்துப் படுத்திருக்கும்போது, நான் பழைய சிரிப்புகளின் அலைகளை மீண்டும் கேட்டேன். ஒரு முட்டாள் பெண்ணின் சிரிப்புகள்." (ப.எண்-45, கே.ஆர். மீரா, மீராசாது, 2023)

மனநோய்க்கு அவரவர் சுற்றி உள்ள சூழலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. தன் இயல்பில்

இருந்து மீள முடியாத நிலைக்கு துளசி தள்ளப்பட்டு உள்ளார் என்பதை மேற்கண்ட உரையாடல் வழி அறிய முடிகிறது. மனிதனுக்கு வாழ்வில் ஏற்படும் பல்வேறு சிக்கல்களினால் அவனது உள்ளம் பாதிக்கப்படுகின்றது. மனிதனின் உள்ளம் பாதிக்கப்படும் பொழுது, உடலும் பாதிக்கப்படுகின்றது. எனவே மனநோய்க்கு ஆளாக வேண்டியச் சூழல் இதனால் உருவாகிறது. மனநலப் பிறழ்வுகள் உயிரியல், உளவியல், சமூகக் காரணிகளின் ஒருங்கிணைந்த தாக்கத்தால் உருவாகின்றன. சிக்மண்ட் ஃபிராய்ட் உருவாக்கிய உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின்படி, உளவியலில் 'இட்'(IT) என்பது ஃபிராய்டின் கோட்பாட்டின்படி மனிதனின் அடிப்படை உள்ளுணர்வுகள் மற்றும் மகிழ்வைத் தேடும் மனநிலையாகும். இது தர்க்கம், ஒழுக்கம், நல்லது-கெட்டது போன்ற எதையும் சிந்திக்காமல், தனக்குத் தேவையானதை அடைய வேண்டும் என்ற கொள்கையில் இயங்குகிறது. புற உலகுக்கும் இட்டுக்கும் பாலமான ஈகோ மெய்ம்மையுடன் கொண்ட உறவில் சச்சரவு ஏற்படாமல் 'இட்' கட்டளைக்கு ஏற்ப ஈகோ ஊசலாட வேண்டியுள்ளது. இதனால் 'இட்'டுக்கு ஏற்பத் தம்மை மீட்டுருவாக்கம் செய்து கொள்ள ஈகோ ஈடுபடுகிறது. இதுவே மனநோய்களுக்கான காரணமாக அமைகின்றது.

2. அந்நியமாக்கப்படுதல்

சிக்மண்ட் ஃபிராய்டின் அந்நியமாதல் (Alienation அல்லது Self-estrangement) என்பது சமூக விதிமுறைகளுக்கு ஏற்ப வாழ முயலும்போது, மனிதர்கள் தங்கள் உண்மையான சுயத்தை ஒடுக்குவதால் உருவாகும் உளவியல் முரண்பாட்டைக் குறிக்கும். மனத்தின் நனவிலி (Unconscious) பகுதிக்கும், சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்கும் இடையே நடக்கும் போராட்டமே இதன் முக்கிய காரணமாகும். "நான் ஒரு மரமானால், சபித்துக்கொண்டே பூக்கவும் பிடிவாதத்துடன் இலையுதிர்க்கவும் செய்வேன். என்னுடைய மலர்களில் விஷத்தை நிறைப்பேன். அதைக் குடித்து வண்டுகளும் பட்டாம்பூச்சிகளும் சருகோடு சருகாக உதிரும். அடுத்த பிறவியிலும் நான் எல்லாவற்றையும் அழிப்பேன்." (ப.எண்-33, கே.ஆர்.மீரா, மீராசாது, 2023)

இந்த உரையாடலின் வழி கதாபாத்திரத்தின் அந்நியமாதல் உணர்வையும், சமூகத்திலிருந்து மனரீதியாக விலகும் நிலையையும் அறியமுடிகிறது. தன் குடுபத்தினருக்கும் குழந்தைகளுக்கும் இழைத்த அநீதிக்கு கைமாறாக தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் மனநிலையாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். எண்ணங்களில், செயல்களில், உணர்ச்சிகளில், மாறுபாடுகள் உண்டாகி மனித மனம் குழப்பமடைந்த நிலையில் மனநோய்க்கு ஆளாகின்ற நிலை வருகின்றது. தமிழ்ப்புதின எழுத்தாளர் சு.வெங்கடேசன், 'மனித உறவுகள் மனதின் பிரதிபலிப்புகள்' (ப.எண்-277, சு.வெங்கடேசன், காவல் கோட்டம், 2008) எனக் கூறுகின்றார். இங்கு தாய்மை போன்ற பாச உணர்வுகள், துளசியின் மன அழுத்தத்தின் உச்சத்தில் மனப்பிறழ்வாக மாறுகின்றன. ஏனெனில் அவர் குழந்தைகளை ஏமாற்றப்பட்ட வாழ்வின் தொடர்ச்சியாக உணர்கின்றார்.

மனிதன் சமூகத்தில் வாழும்போது, தனது அடிப்படை இயல்பான ஆசைகளைச் (Libido) சமூகக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள அல்லது அடக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த அடக்குமுறை (Repression), ஒருவரைத் தனது சுயவிருப்பத்தில் இருந்து அந்நியப்படுத்துகிறது. மனச் சிதைவு (Splitting Ego) சுற்றுச்சூழல் தரும் அழுத்தத்தால், மனித மனம் தனது நனவான எண்ணங்களுக்கும், நனவிலி ஆசைகளுக்கும் இடையே ஒரு முரண்பாட்டை உருவாக்குகிறது. இந்த பிளவுபடும் தன்மை, ஒருவரை தனக்குள்ளேயே ஒரு அந்நியராக உணர வைக்கிறது.

3. குற்றவுணர்ச்சி

உளப்பகுப்பாய்வில் ஆளுமைக் கோட்பாட்டின்படி எதிர்களின் இணைகள் (pairs of opposites) வரிசையில் வதைத்துறு மோகம் வதைந்துறு மோகம் என இருவகை உள்ளது. இது மோகத்திரிபுகளில்

அதிகமாகப் பேசப்படுகின்ற இணையாகும்.

- வதைத்துறுநிலை (Sadism)
- வதைந்துறுநிலை (masochism)

வதைத்துறு மோகமும், வதைந்துறு மோகமும் உள்ளத்தின் குணங்களாகும். வதைத்துறுநிலை என்பது பிறரைத் துன்புறுத்தி இன்பம் காண்கிற மனநிலையைக் குறிக்கும். வதைந்துறுநிலை என்பது பிறரால் துன்புறுத்தப்பட்டு இன்பம் காண்கின்ற மனநிலையைக் குறிக்கும். மற்றவருக்கு வலியை ஏற்படுத்தி இன்பம் காண்பது வதைத்துறு மோகமாகும். இச்செயலில் துன்பம் அல்லது வலி என்பது உடல் வலி, மன வலி ஆகிய இரண்டையும் குறிக்கும்.

"அழிப்பு அல்லது சிதைப்புத் தொழிலுக்கு மூர்க்க உணர்ச்சி (Aggression) அடிப்படையாக உள்ளது. மூர்க்க உணர்ச்சி சாவுணர்ச்சிகளில் ஒன்றாகும்." (ப.எண் – 424, சிக்மண்ட் ஃபிராய்டு, உளப்பகுப்பாய்வு அறிவியல், 2005) என்று ஃபிராய்டு முன்மொழிகின்றார்.

'சாவுணர்ச்சிகளில் ஒன்றான மூர்க்கம் (aggression) வதைத்துறு, வதைந்துறு மோகங்களில் வெளிப்படுகின்றன. மோகம் என்பது வாழ்வுணர்ச்சிகளில் ஒன்றாகும். மூர்க்கமோ சாவுணர்ச்சிகளில் ஒன்றாகும். எதிரும் புதிருமான இரண்டு உணர்ச்சிகள் இணைந்து வெளிப்படுவதை உள்ளுணர்ச்சிகளின் சேர்க்கை என்கிறார் ஃபிராய்ட்' (ப.எண் –363, சிக்மண்ட் ஃபிராய்டு, உளப்பகுப்பாய்வு அறிவியல், 2005). இதன்படி மூர்க்க உணர்ச்சித் தொடர்புடைய அழிப்பு உணர்ச்சியும் 'வதை மோகங்களில்' பங்கு கொள்கின்றது. அதாவது, புறநிலை அழிப்பின் வழியில் வதைத்துறு மோகமும் அகநிலை அழிப்பின் வழியில் வதைந்துறு மோகமும் நிகழ்கின்றன. இவ்விரண்டில் வதைந்துறு மோகத்தை முக்கிய ஆளுமைப் பண்பாக உளப்பகுப்பாய்வுக் காண்கிறது. துன்பங்களைக் கொடுத்து இன்புறுவது வதைத்துறு மோகத்தின் நோக்கமாக இருப்பதால் துன்பமும் இன்பமும் ஒரே இடத்தில் அமையப் பெற்றால் துன்பத்தைதான் வதைந்துறு மோகி தேர்வு செய்வார். "என் உடல் முழுதும் விஷம்தான். காதலின் விஷம். எனக்கு இறப்பதற்கு விருப்பம் இல்லாதிருந்தது. உயிரோடு இருக்க வேண்டும். புரையோடிப்போன புண் போன்று உயிர்த்திருக்க வேண்டும். பார்ப்பவர்களுக்கு வலிக்க வேண்டும்." (ப.எண் - 48, கே.ஆர்.மீரா, மீராசாது, 2023) என்ற உரையாடலின் வழி, துளசியின் வதைத்துறுநிலை (Sadism) மோகம் வெளிப்படுகின்றது.

மீராசாது புதினத்தில், துளசி என்ற பெண் திருமண வாழ்க்கையில் தன் கணவனால் ஏமாற்றப்பட்ட பின்பு, தனது இரு குழந்தைகளைக் கொலை செய்துவிட்டு, துறவுப் பாதையைத் தேர்வு செய்கிறார். இது ஒரு சாதாரண செயலாக அல்லாமல், மனச்சிதைவு (psychological breakdown) எனக் கருதப்படுகின்றது. அதாவது, அறியப்படாத மனம் (Unconscious) மனிதனின் நடத்தையையும் முடிவுகளையும் தீர்மானிக்கிறது. பொதுவாக வதைத்துறு மோகத்திற்குத் 'தண்டிப்பு வேட்கை' அடிப்படைக் காரணமாகும். ஒருவரிடம் தான் தண்டிக்கப்பட வேண்டும் என்கின்ற எண்ணம் உருவாவதற்குப் பிண்ணணியாகக் 'குற்றவுணர்வு' (quilt) அமைகிறது. நனவிலிக்குள் பொதிந்துள்ள உணர்வுகளில் குற்றவுணர்வும் ஒன்று என ஃபிராய்டு கூறுகின்றார். நனவிலி ஈகோவின் குற்றவுணர்வுக் காரணமாகத் தான் தண்டிக்கப்படவேண்டும் என்கிற வேட்கையைக் கொள்கிறது. இதற்கு சூப்பர் ஈகோவின் ஆதிக்கமே காரணமாகும். இட்டின் சில உந்தல்களைக் குற்றங்கள் என்று சூப்பர் ஈகோ சாடுவதால் அவ்வுந்தல்கள் நனவிலிக்குள் குற்றவுணர்வுகளாகப் பதிந்து விடுகின்றன. ஃபிராய்டு கூறும் மூர்க்கத்தின் அடிப்படையில், நீண்ட காலமாக அடக்கப்பட்ட உணர்வுகள் (repression) ஒரு கட்டத்தில் வெடித்து, அழிவின் வடிவமாக வெளிப்படுகின்றன.

முடிவுரை

கே.ஆர். மீராவின் மீராசாது புதினம் மனித மனத்தின் ஆழமான உளவியல் இயக்கங்களை யதார்த்தமாகப் பதிவு செய்யும் சிறந்த படைப்பாக அமைகிறது. மீராசாது புதினம் உளவியல் நிஜவாதம் மற்றும் பெண்ணிய சிந்தனைகளை ஒருங்கிணைக்கின்றன. இவை மனித மனத்தின் இருண்ட பகுதிகளையும், அதே சமயம் அதன் மீளுருவாக்கத் திறனையும் வெளிப்படுத்துகின்றன. இப்புதினத்தில் முதன்மைக் கதாப்பாத்திரமான துளசி எனும் பெண் தன்இயல்பு நிலையிலிருந்து கடந்து அந்நியமாக்கப்படுதல், தாழ்வு மனப்பான்மை நனவிலி மனத்தின் ஆதிக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அழிவு (destruction) வழியைத் தேர்வு செய்கிறார். மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், வெறுக்கத்தக்கதான அனுபவங்கள் ஆகிய இவற்றை நனவு மனதிலிருந்து நசுக்கி, நனவிலி உள்ளத்திற்குத் தள்ளிவிடுவதால் மனதில் சிக்கல் ஏற்பட்டுத் துளசி மன நோயாளியாக மாறுகிறார். உள் மனப் போராட்டங்கள், குற்ற உணர்வையும், மன அழுத்தத்தையும் தீவிரமடையச் செய்து, இறுதியில் மனச்சிதைவு மற்றும் தன்னழிவு உந்துதல் போன்ற உளவியல் நிலைக்கு துளசி தள்ளப்படுகிறார். இதன்மூலம் மனித நடத்தையைத் தீர்மானிப்பதில் அறியப்படாத மனமும் உள்மனப் போராட்டங்களும் முக்கியப்பங்கு வகிக்கின்றன என்பதைக் கே.ஆர்.மீரா உளவியல் யதார்த்தவாதத்தின் வழி ஆழமாக வெளிப்படுத்தியுள்ளார். எனவே மீராசாது புதினம் உளவியல் அடிப்படையில் மனநோய்க்கான காரணங்களை வைத்து மனித மனத்தின் சிக்கல்களை நுட்பமாகப் பதிவு செய்கின்றது.

துணைநூற்பட்டியல்

1. சிக்மண்ட் ஃபிராய்ட், இரவிச்சந்திரன், தி.கு.,(மொ.பெ.), சிக்மண்ட் ஃபிராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம், சென்னை – 89, ஆறாம் பதிப்பு-2022.

2. சிவலிங்கனார், அ., தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுப்பும் குறிப்பும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 88, மு.ப.1994.

3. மீரா, கே.ஆர்., செந்தில்குமார், மோ.,(மொ.பெ.), மீராசாது, எதிர் வெளியீடு பதிப்பகம், பொள்ளாச்சி – 02, முதற்பதிப்பு 2023.

4. தமிழ்ச்செல்வன், சு.,காவல் கோட்டம், தமிழினி பதிப்பகம், சென்னை – 51, மு.ப. 2008.

References

1. Meera, K.R., Senthilkumar, M., (T.), Meerasadhu, Edhir Veliyedu Publications, Pollachi – 02, 1st Edition 2023.

2. Sigmund Freud, Ravichandran, T.K., (T.), Sigmund Freud Psychoanalysis Science, Alaigal Publications, Chennai – 89, 1st Edition-2005.

3. Sivalinganar, A., Compilation and Notes on Tolkappiyam Poruladhikaram, World Tamil Research Institute, Chennai – 88, 1st Edition- 1994.

4. Tamizhchelvan, S., Kaval Kottam, Tamizhini Publications, Chennai – 51,1st edition – 2008.

Cite this Article in English

Susmitha.K, Bhuvaneswari.C "**The Psychological Dimensions of Meerasadhu Novel**" *MASIVAN : JOURNAL OF LANGUAGE AND LITERATURE STUDIES, ISSN: 3048-7854, Vol.3 Issue 2, July 2026, pp. 54-62*